RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

DOI:10.34256/irjt2316

OPEN ACCESS

# இன்றைய நிர்வாகத்திற்கு வழிகாட்டியாய் நிற்கும் பழமொழிநானூறு

இரா. விஷ்ணுப்பிரியா [அ, *]

[அ] தமிழ்த்துறை, நல்லமுத்துக் கவுண்டர் மகாலிங்கம் கல்லூரி, பொள்ளாச்சி, கோயம்புத்தூர்-642001 தமிழ்நாடு, இந்தியா

# Pazhamozhi Naanooru as a Guidance of Contemporary Administration

R. Vishnupriya [a, *]

[a] Department of Tamil, Nallamuthu Gounder Mahalingam College, Pollachi, Coimbatore-642001, Tamil Nadu, India

* Corresponding Author: rvishnupriya2012@gmail.com

Received: 01-07-2022
Revised: 08-10-2022
Accepted: 30-10-2022
Published: 01-12-2022

Check for updates

## ABSTRACT

Our predecessors considered love and courage as eyes. They managed the familial and govermental administration with proper responsibility and guided their successors. Pazhamozhi naanooru by Mundrurai Arayanaar is one among pathinen keezhkanakkunool which depicts people's discipline and thoughts in first two lines and continued with its relevant realtime proverb in the following two lines. This work has followed the structural footsteps of sangam literary works such as aganaanooru, puranaanooru, natrinai naanooru. It was first published by Sodasavadhanam Subburaya Chettiyar and later many editions were flourished. Everyone values the work similar to that of Thirukkural and Naaladiyar. It projects the required strategies for better administration of a company. The significance of administration is to opt the person who is capable of efficient skills. Administrative skill is necessary to plan the distribution, contribution, time and labour for a work. It becomes a platform to expose one's talent. How to evaluate, plan, speaking ability, neglecting irresponsibility, avoiding flattery and executing the work are some of the significant ideas of Pazhamozhi Naanooru. The research paper projects the importance of administrative strategies through the work Pazhamozhi Naanooru.

**Keywords:** Pazhamozhi Naanooru, Talent, Fluency, Strife, Planning, Evaluation

## முன்னுரை

தமிழினம் உலகின் தொன்மையான இனங்களில் ஒன்று. வாழ்வின் எல்லாக் கூறுகளையும் எடுத்துரைக்கக் கூடிய இலக்கியங்களை உடையது. அவ்வகையில் சங்கம் மருவிய காலத்தில் தோன்றிய பதினெண்கீழ்க்கணக்கு நூல்களில் ஒன்றான பழமொழிநானூறு இன்றைய நிர்வாகத்திற்கு உட்பட்ட சிக்கலான சவால்களை எல்லாம் எளிமையாகக் கையாள்கின்றது. அந்நூலில் இடம்பெற்றுள்ள பழமொழிகள் ஒவ்வொன்றும் முதுமொழியாய் நின்று தற்போதுள்ள நிர்வாக மேலாண்மைக் கூறுகளுக்கு வழிகாட்டியாகவும், பொருத்தமாகவும் அமைந்துள்ளதை எடுத்துரைக்கும் விதத்தில் இக்கட்டுரை இடம் பெறுகின்றது.

## திட்டமிடல்

வியாபாரத்திற்கும், குடும்பத்திற்கும், அலுவலகத்திற்கும் திட்டமிட்டு ஒரு பணியைச் செயலாற்றினால் அச்செயல் வெற்றி பெறும். இல்லையெனில் தொழிலோ, வாழ்க்கையோ

எதுவாயினும் நட்டத்தையோ அல்லது இழப்பையோ சந்திக்க நேரிடும். ஒரு செயலைச் செய்வதற்கு முன் அச்செயலுக்கான வேலையை எவ்வாறு செய்ய வேண்டும்? ஏன் செய்ய வேண்டும்? என ஆராய்வதோடு அதற்குத் துணையாக அமைபவர்களின் தன்மையையும் ஆராய்ந்து, அச்செயலின் மூலம் வருகின்ற பயனையும் ஆராய்ந்து செயல்பட வேண்டும். இல்லையெனில் எடுத்த காரியம் முழுமையடையாது. இதனை,

“தற்றூக்கித் தன்துணையும் தூக்கிப் பயன்தூக்கி

மற்றவை கொள்வ மதிவல்லார் - அற்றன்றி

யாதானும் ஒன்று கொண்டு யாதானும் செய்தக்கால்

யாதானும் ஆகி விடும்”

என்ற பாடல் விளக்குகின்றது (Rasamanickam Pillai, 1958). ஒரு வேலைக்கு எத்தனை ஆட்கள் தேவை? எத்தனை மணிநேரத்தில் அப்பணி நிறைவடையும். ஒரு தொழிலில் வரவு எவ்வளவு? செலவு என்ன? என்பன போன்ற கேள்விகளை நாம் கருத்தில் கொண்டால் எதிலும் சுலபமாக ஜெயித்து விடலாம். தம்மால் செய்து முடிக்கக்கூடிய ஒரு செயலினைத் தாமே செய்து முடித்தலே முறைமையாகும். பிறரை வைத்துச் செய்வித்துக் கொள்வோம் என்றிருப்பின் அக்காரியம் ஒரு போதும் முழுமையாக நிறைவேறாது. அது வெந்நீரில் குளிக்கத் துணியாதவர்கள் என்றாவது தீப்பாய்ந்து குளிப்பதற்குத் தயார் ஆவார்களோ என்பதற்குச் சமம் ஆகின்றது என்னும் செய்தியை,

“தம்மால் முடிவதனைத் தாமாற்றிச் செய்கலார்

பின்னை ஒருவரால் செய்வித்தும் என்றிருத்தல்

சென்னீர் அருவி மலைநாட! பாய்பவோ

வெந்நீரும் ஆடாதார் தீ”

என்ற பாடல் பகர்கின்றது (Rasamanickam Pillai, 1958). “திட்டமில்லாதவனுடைய வாழ்க்கை கரையில்லாத ஆற்றைப்போல வீணாகும். காற்றாற்றில் வரும் வெள்ளத்தை, அணை மூலம் தேக்கிப் பின்னால் உரிய வாய்க்கால்கள் மூலமாக பாசனத்திற்குப் பயன்படுத்தி நெல்லும், கரும்பும், வாழையும் விளைவிப்பதைப் போல நம்முள் இருக்கும் ஆற்றலைத் தேக்கி ஒருமுகப்படுத்தி முறையான திட்டத்தின் மூலமாக நமது இலட்சியத்தை அடைய முயற்சிக்க வேண்டும். இலட்சியம் என்ற அழகிய கோபுரத்திற்கு திட்டமிடுதல் அடித்தளமாகும்” என்ற செய்தியை நாம் மனதில் பதிய வைத்துக் கொண்டால் வாழ்க்கையில் சாதனை புரியலாம் (Kavidasan, 2018).

“இதனை இதனால் இவன் முடிக்கும் என்றாய்ந்து

அதனை அவன்கண் விடல்”

என்கின்றார் வள்ளுவர் (Varatharasan, 2004). ஆகவே ஒரு காரியத்தை எப்படி நிறைவேற்ற வேண்டும் என ஆராய்ந்து பார்த்து அக்காரியத்தை ஒருவரிடம் ஒப்படைத்தால் வெற்றி கிடைக்கும் என்பதை இதன் கண் அறிய முடிகின்றது. ஒருவர் செல்வாக்குடன் வாழ விரும்பினால் தாம் மேற்கொண்ட செயலை ஆராய்ந்து திட்டமிட வேண்டும் என்ற கருத்தை “வாழ்க்கை வேண்டுவோன் சூழ்ச்சி தண்டான்” என்ற முதுமொழிக்காஞ்சி அடியும் எடுத்துரைக்கின்றது (Rasaram, 2007).

## பொறுப்பின்மையும், செயல்பின்னடைவும்

நாம் ஒரு செயலைச் செய்து முடிக்க நினைத்தால் உடனே அச்செயலைச் செய்துவிட வேண்டும். இல்லையெனில் மனதில் சோம்பேறித்தனம் குடிகொண்டு விடும். பிறகு ஒரு செயலை நாளை செய்யலாம், பிறகு பார்க்கலாம் என்று ஒரு வேலையைப் பல நாட்களுக்கு நீடித்தோம் எனில் அவ்வேலை குறிப்பிட்ட நேரத்தில் சரியாக நடைபெறாது. ஒரு செயலை மற்றவர்களிடம் ஒப்படைக்கும் பொழுது அவர் அவ்வேலையைச் சரியாகச் செய்து முடிப்பாரா என்று ஆலோசித்த பின்னரே ஒரு

வேலையை அவரிடம் கொடுக்க வேண்டும். தன்னம்பிக்கையும், சுறுசுறுப்பும் இல்லாத ஒரு சோம்பேறியிடம் வேலையை ஒப்படைக்கும்போது அவ்வேலை சிதைவுற்று அழியும் என்னும் உயரிய சிந்தனையை,

"தலைக்கொண்ட தங்கருமம் தாமடி கொண்டு

கடைப்பிடியில்லாதார் பால் வைத்துக் கடைப்பிடி

மிக்கோடி விட்டுத் திரியின் அது பெரிது

உக்கோடிக் காட்டி விடும்"

என்னும் பாடல் தெளிவுறுத்துகின்றது (Rasamanickam Pillai, 1958). இதை நிர்வாகத்தில் கடைப்பிடிக்கும்பொழுது எதிரிகளை சுலபமாக வென்று விடலாம். இல்லையெனில் மற்றவர்களிடம் அடிமைப்பட்டுக்கொண்டு கையேந்தியும், சொல்லும் வார்த்தைக்கு தலையசைத்துக் கொண்டு வாழும் சூழ்நிலையே ஏற்படும். ஒருவன் ஒரு தொழிலைச் செய்து முடிப்பதற்கு உரியவனா என்பதை ஆராய்ந்து பார்த்த பின்னரே அவ்வேலையை மற்றவர்களுக்குக் கொடுக்க வேண்டும் இல்லையெனில் அவ்வேலை பல வருடங்கள் கடந்தாலும் நடக்காது என்பதை,

"வினைக்கு உரிமை நாடிய பின்றை அவனை

அதற்கு உரியனாகச் செயல்"

எனக் குறிப்பிடுகின்றார் வள்ளுவர் (Varatharasan, 2004). 'தெரிந்து வினையாடல்' என்ற ஒரு அதிகாரத்தையே இதற்குப்படைத்திருக்கின்றார். ஒன்றை நன்கு ஆலோசித்த பின்னரே முடிவு செய்ய வேண்டும் என்ற பண்பை இதன் வழி கற்றுக் கொள்ள முடிகின்றது.

## ஊதியம்

உடம்பிற்கு உணவு இல்லையேல் உடல் சோர்வது போல, ஊதியம் தராத எந்த வேலையும் சோர்ந்து விடும். தோல்வியைத் தழுவி விடும் 'பணம் என்றால் பிணமும் வாய் பிளக்கும்' என்பது நம் முன்னோர்களிடம் நாம் கற்றுக் கொண்ட பழமொழி. ஆகையால் வாழ்க்கையைத் தீர்மானிப்பது பணம் மட்டுமே ஆகும். உயர்வும், தாழ்வும் சாதியால் மட்டும் அல்ல பணத்தாலும் விளைகின்றது. ஏழை, பணக்காரன் என்ற பாகுபாடு பணத்தால் வருவதால் அன்றோ உறவுகளில் மகிழ்ச்சியும், விரிசலும் நிலவுகின்றது. ஒருவன் வேலை செய்யும்பொழுது அவனை ஊக்கப்படுத்தினால் மட்டுமே அவ்வேலை வேகமாக முடியும். அதற்கு ஊதியம் அடைப்படையாகின்றது. குடும்பத்தை வழிநடத்த அனைவருக்கும் தேவையுடைய பொருளாக இன்று சிறந்து விளங்குகின்றது. தம்முடைய சொந்த வண்டியே ஆனாலும் உயவு நெய் இல்லாமல் வண்டி செல்லாது அல்லவா அதுபோல தாம் அச்சாணியாகக் கருதிக் கொண்ட ஒரு செயலை ஊதியம் தராமல் முடிக்குமாறு ஏவினால் ஒருவன் பத்து ஆண்டுகள் ஆயினும் அதனை மெதுவாகவே செய்வான். காணியளவு பொருளாயினும் தமக்குப் பயனாகப் பெறாமல் ஒரு காரியத்தைச் செய்பவன் இவ்வுலகில் எவனுமே கிடையாது என்பதை,

"ஆணியாக் கொண்ட கருமம் பதிற்றாண்டும்

பாணித்தே செய்ப வியங்கொள்ளின்-காணி

பயவாமல் செய்வாரார் தஞ்சாகாடேனும்

உயவாமல் சேறலோ இல்"

என மொழிகின்றது. இன்று நிர்வாகத்தில் பல்வேறு கட்டங்களில் பணிபுரிபவர்கள் தங்கள் வேலைகளைச் சரிவரச் செய்து வருகிறார்களா என்பதைக் கண்காணிப்புச் செய்து, பணி மதிப்பீடு செய்து அதன் மூலம் ஊதியமும், பணி உயர்வும் வழங்கப்படுகின்றது (Rasamanickam Pillai, 1958). இதனை ஆங்கிலத்தில் 'Performance Appraisal' என்பார்கள். "பணியாளர் தமது பணியில் எவ்வாறு நடந்து கொள்கிறார்கள் அவர்களது திறமை என்ன, என்பன போன்ற முக்கியமான காரணிகளை அவ்வப்போது

முறையாக அளந்து மதிப்பீடு செய்வதே செயல் திறன் மதிப்பீடு ஆகும். இதனால் ஒவ்வொரு தொழிலாளிக்கும், அவர்களுக்குச் சாதாரணமாக வழங்கப்படும் ஊதியத்துடன் அவர்களது திறமைக்காக எவ்வளவு கூடுதல் தொகை அளிக்கலாம் என்பதைக் கண்டறிய இயலும்" என்று லார்க்கின் என்ற அறிஞரும் குறிப்பிடுகின்றார். திறமைக்கேற்ற பணம் கிடைக்கும் பொழுது ஒருவருக்கு ஒரு வேலையை வேகமாக செய்து முடிக்க வேண்டும் என்ற எண்ணமும் பின்பு அடுத்துள்ள பிற வேலைகளைத் தொடர வேண்டும் என்ற எண்ணமும் தான் மனதில் எழும் என்ற எதார்த்தத்தை, நிர்வாகத் தந்திரத்தை இங்கு கற்க முடிகின்றது (Kathiresasn, 2011).

## இனிமையாகப் பேசுதல்

நிர்வாகத்திற்கு கனிவான சொல்லும், தெளிந்த பேச்சும் அவசியமாகின்றது. தனக்கு வாயில் தோன்றிய வார்த்தைகளை எல்லாம் கூறினால் மற்றவர்களுக்கு மனஸ்தாபமும் கோபமும் தான் ஏற்படும். அதனால், எந்த ஒரு வேலையும் சரியாக நடைபெறாது. ஒருவர் அன்பால் எதனையும் சாதிக்க முடியும் என்பதை உணர்ந்து செயல்பட்டால் நல்ல பயனைப் பெற முடியும் ஒருவர் வாயிலிருந்து வரும் சொல் அன்பு கலந்ததாகவும், குற்றமற்றதாகவும், உண்மையானதாகவும் இருக்கவேண்டும். இதனைப் பழமொழி நானூறு விளக்குகின்றது.

உடுக்க உடையும், உண்ண உணவும், நோய்க்கு மருந்தும், தங்குவதற்கு இடமும் இவற்றோடு இன்ன பிறவும் பிறருக்குக் கொடுத்து அவர் குறைகளைத் தீர்த்து அவரை அனுப்பி வைத்து அவர்பால் இனிமையான சொற்களை மட்டும் சொல்லாமல் இருப்பது மிகவும் தவறாகும். இது எருமையைக் கொன்று சமைத்து விருந்து வைக்கத் தொடங்கும் ஒருவர் அதற்குரிய மசாலாப் பொருட்களுக்குச் சிக்கனம் காட்டுதலைப் போன்றது. கறி இருப்பினும் எவ்வாறு அதன் சுவை வெளிப்படவில்லையோ அதைப்போல இனியசொல் கூறாத கொடையும் மதிப்பிழக்கும் என்னும் தனித்துவத்தை,

"உடுக்கை மருந்து உறையுள் உண்டியோடு இன்ன

கொடுத்துக் குறைதீர்த்தல் ஆற்றி - விடுத்தின்சொல்

ஈயாமை என்ப- எருமை எறிந்தொருவர்

காய்க்கு லோபிக்கும் ஆறு"

என்ற வரிகள் விளக்குகின்றன. இச்செய்யுளில் சுட்டப்படும் உலோபி என்ற சொல் ஒருவருக்கும் ஒன்றுங் கொடுத்து உதவாதவனைக் குறிக்கின்றது (Rasamanickam Pillai, 1958). அது போல ஒருவரிடமும் அன்பை ஈயாது இருப்பது நல்லதல்ல என்பதை இதன் வழி முடிகின்றது. பிறருக்கு எந்த உதவியும் செய்ய இயலாவிடினும் இனிய சொல்லாலாவது பிறரைக் குளிரச் செய்யலாமே என்று திருமூலரும்,

"யாவர்க்கும் ஆம் இறைவற்கு ஒரு பச்சிலை

யாவர்க்கும் ஆம் பசுவுக்கு ஒரு வாயுறை

யாவர்க்கும்ஆம் உண்ணும்போது ஒரு கைப்பிடி

யாவர்க்கும் ஆம் பிறர்க்கு இன்னுரை தானே"

என்று இன்சொல்லின் சிறப்பைக் குறிப்பிடுகின்றார் (Annamalai, 1997). அன்பினால் ஒருவனுடைய உள்ளம் நெகிழ்ச்சி அடையுமாறு செய்து அவன் வழியே நடந்து அவனால் காரியத்தை முடித்துக் கொள்ளுதலே சிறந்தது. அங்ஙனமின்றி ஒருவனை வற்புறுத்தி காரியத்தை முடிக்க நினைப்பது தவறானதாகும். அது எவ்வாறு எனில், பசுவின் மடியில் கன்றைக் குடிக்க விட்டுப் பிறகு பால் கரந்து கொள்ளலாம் என்று நினைக்காது, அம்பு எய்து பசுவைக் கொன்று அதிலிருந்து பால் கறக்கமுயல்வது போன்றதாகும். இதனை,

"அன்பின் நெகிழ விட்டுக் கொள்ளாது

நின்ற பொழுதின் முடிவித்துக் கொள்வதே

கன்று விட்டு ஆக்கறக்கும் போழ்தில் கறவானாய்

அம்பு விட்டு ஆக்கறக்குமாறு"

என்ற பாடல் உணர்த்துகின்றது (Rasamanickam Pillai, 1958). சமூகத்தில் "அறிவை நாம் வியக்கிறோம் வணங்குவதில்லை அன்புதான் என்றும் அனைவரின் தொழுகைக்கு உரியது. புத்தரும், இயேசுவும், நபிகள்நாயகமும், அண்ணல்காந்தியடிகளும் இன்று வரை நினைக்கப்படுவதற்கும் தொழப்படுவதற்கும் காரணம் அவர்களுடைய மூளை அன்று, ஈரமான இதயம் தான்" என்று அன்பின் வெளிப்பாட்டை நாம் பார்க்க முடிகிறது. இதனை நிர்வாகத்தில் பின்பற்றினால் செயல் தங்குதடையின்றி வெற்றி பெறும் (Tamizhppriyan, 2004).

## பிறரை மதிப்பிடல்

நிர்வாகத்திற்குரிய முக்கியமான பண்புகளில் ஒன்றாக விளங்குவது, பிறரை மதிப்பிட்டு வேலையைப் பங்கிடுவதாகும். பெரிய உலைப்பாத்திரத்தின் உள்ளே வேகின்ற அரிசியை ஓர் அகப்பையால் எடுத்துப்பார்த்து அரிசி வெந்துவிட்டதா என்ற தன்மையை நாம் அறிந்து கொள்ள முடியும். அதற்காக உலையில் உள்ள எல்லா அரிசியையும்எடுத்துப் பார்த்து வெந்து விட்டதா என்று பார்க்க வேண்டிய அவசியம் இல்லை. அதுபோல ஒருவரின் குணம், ஒழுக்கம், செயல் முதலிய ஒவ்வொன்றையும் தனித்தனியே ஆராய வேண்டியதில்லை. 'ஒரு பானை சோற்றுக்கு ஒரு சோறு பதம், என்பது போல மனிதனைப் பற்றித் தெரிந்து கொள்ள வேண்டும் என்றால் அவனுடைய செயல்களைப் பார்த்தாலே போதும் அவனுடைய முழு குணநலன்களையும் அறிந்து கொள்ள முடியும் என்னும் உயரிய நிர்வாகச் சிந்தனையை,

"பேருலையுள் பெய்த அரிசியை வெந்தமை

ஓர் மூழையாலே உணர்ந்தாங்கு-யார்கண்ணும்

கண்டதனால் காண்டலே வேண்டுமாம் யார்கண்ணும்

கண்டது காரணமாம் ஆறு"

என்று சுட்டுகின்றது (Rasamanickam Pillai, 1958). இதனைக் குறிப்பறிதல் எனலாம். வள்ளுவர் இக் 'குறிப்பறிதல்' என்னும் அதிகாரத்தை மட்டும் இரண்டு முறை சுட்டிச்செல்வது அதன் பெருமையையும், வலிமையையும், உணர்த்தும்.

"கூறாமை நோக்கக் குறிப்பறிவான் எஞ்ஞான்றும்

மாறாநீர் வையக் கணி"

ஒருவன் வாயால் எதையும் சொல்லாமல் இருக்க அவனுடைய முகத்தையும், கண்ணையும் பார்த்தே ஒருவனின் மனக்குறிப்பையும், எண்ணத்தையும், அறிந்து கொள்ள முடியும் என்பதையும், அவன் இவ்வுலகிற்கு ஆபரணம் போன்றவன் என்பதையும் இக்குறள் பதிவு செய்கின்றது (Varatharasan, 2004). ஒருவரின் செயல்பாட்டை அவர்தம் உறுப்புகளின் குறிப்பினால் ஆராய்ந்து அறிவார்கள் என்பதை "உறுப்பினால் ஆராயும் ஒண்மை" என்று நாலடியார் பதிவு செய்கின்றது (Srichandran, 1989).

## கல்வி

கட்டுப்படுத்தியும், முறைப்படுத்தியும், நாம் கவனித்துச் செயல்படுத்துகின்ற நிர்வாகத்தை இன்று நாம் Management, Administration என்னும் ஆங்கிலச் சொற்களால் குறிப்பிட்டு அதற்கான கல்வி முறைகள் பலவற்றைப் பயில்கின்றோம். இந்நிர்வாகக் கல்விக்கான அடிப்படைத் தளங்கள் பலவும் பழமொழிநானூற்றில் நிறைந்து காணப்படுகின்றன. வேகமாக ஒரு செயல் முடிவதற்கு படித்தவனிடம் ஒப்புவித்தால் அச்செயல் நல்ல முறையில் வெற்றியடையும். இவன் என் உறவினன் என்றோ, உறவினன் அல்லாதவன் என்றோ கருதக்கூடாது. கற்றறிந்த ஒருவனை ஆராய்ந்து பார்த்து அவனிடமே

ஒரு செயலை ஒப்படைக்க வேண்டும். படித்தவன் உரிமையாளனின் பேச்சைக்கேட்டு நடப்பான். தன்னுடைய தலைமைப் பொறுப்பில் இருக்கும் உரிமையாளனின் பேச்சைக் கேளாமல் போனாலும், அது எருது உணவிட்ட உப்பை போன்று நன்மை தருவதாகவே முடியுமே அல்லாமல் உடைமைக்காரனுக்கு எந்தவிதமான நட்டமும் ஆகாது என்னும் செய்தியை,

"உற்றான் உறாஅன் எனல் வேண்டா ஒண்பொருளைக்

கற்றானை நோக்கியே கைவிடுக்க -கற்றான்

கிழவனுரை கேட்கும் கேளான் எனினும்

இழவன்று எருதுண்ட உப்பு"

என்ற பாடலால் அறியமுடிகின்றது (Rasamanickam Pillai, 1958). பொதுவாகக் கல்லுதல் என்னும் சொல்லிற்குத் தோண்டுதல் என்று பொருள். ஒன்றைத் துருவி ஆராய்வது எனவும் பொருள் கொள்ளலாம். ஒரு செயலை அல்லது வேலையைக் கற்றவர்கள் தோண்டித் துருவி ஆராயும்பொழுது புதுமையான கண்ணோட்டமும், செயலில் தடுமாற்றமும் இருக்காது.

"கல்வி என்பது மனிதனின் மனதைக் கிளறி பண்படுத்துகின்றது. நிலத்தை உழுது முறைப்படுத்தாவிட்டால் வேளாண்மைக்கு உதவாது. அது போலத்தான் கல்வி கற்று மனதை முறைப்படுத்தாவிட்டால் அவை நல்வாழ்வுக்கு உதவாது. கல்வி இல்லை என்றால் இந்த சமுதாயத்தில் மனிதன் மனிதனாகவே வாழ முடியாது. கல்வி மட்டுமே அனைத்தையும் சீர்திருத்தக் கருவியாகப் பயன்படுகின்றது" என்பதை உணர்ந்து செயலாற்ற வேண்டும் (Palaniammal, 2022).

## விடாமுயற்சி

ஒருவனுக்கு கை முதல் சிறிதளவாக இருப்பினும் விடாமுயற்சியினால் அதனைப் பெரிதாக்கிக் கொண்டு தன்னை இகழ்ந்த ஊரார் பலர் மெச்சும்படி வாழ்வதற்கு முயற்சி ஒன்று தான் தேவையாம் நடக்க முடியாத கன்று கூட ஒரு நாள் பெரியதாக வளர்ந்து காளையாகிச் சிறப்படைதல் போல தன் இலக்கை நோக்கி ஒருவன் ஓடிப் பயணம் செய்தால் இலக்கு உண்டாகும் என்பதில் ஐயமில்லை. என்னும் கருத்தை,

"உள்ளூரவரால் உணர்ந்தாம் முதலெனினும்

எள்ளாமை வேண்டும்இலங்கிழாய் தள்ளா

தழுங்கள் முதுபதி அங்காடி மேயும்

பழங்கன்றே முதலும் உண்டு"

என்ற அடி எடுத்துரைக்கின்றது (Rasamanickam Pillai, 1958).

"தெய்வத்தால் ஆகாது எனினும் முயற்சி தன்

மெய்வருத்தக் கூலி தரும்"

முதலீடு பெறுகவும், முன்னேற்றம் அடையவும், விடாமுயற்சி தேவை என்பதை இங்கு அறியமுடிகின்றது (Varatharasaanar, 2004).

"அஞ்சுவார்க்கில்லை அரண்"

உள்ளத்திலே அஞ்சி நடுங்கும் கோழைகளாக இருப்பவர்களுக்குப் பாதுகாப்பு அரண் என்பது எதுவுமே கிடையாது (Rasamanickam Pillai, 1958). ஒருவன் நிற்கவும், நடக்கவும், பேசவும் பயப்பட்டால் வாழ்வில் சாதனை புரியவே முடியாது. நிர்வாகத்திற்கு ஒரு காரியம் செவ்வனே நடைபெற வேண்டுமெனில் தளராத உள்ளமும், விடாமுயற்சியும் தேவை. என்பதை இப்பாடல் உணர்த்துகின்றது. தன் முனைப்போடு செயல்பட்டு வாழ்வில் வெற்றி பெற்றவர் பலர் உள்ளனர் கஜினி முகமது தொடர்ந்து 17 முறை படையெடுத்து வந்து தான் சோமநாதர் ஆலயத்தைக் கொள்ளையடித்தான். அவன்

நோக்கம் தவறாக இருந்தாலும் விடாமுயற்சியே அவனுக்கு வெற்றியைத் தேடித் தந்தது என்பதை நாம் நினைவில் கொள்ள வேண்டும். எந்த ஒரு செயலையும் தொடர்ந்து செய்யும்பொழுது வெற்றி உறுதியாகின்றது. அதே சமயம் பாதியில் ஒரு செயலை விட்டுவிட்டால் அதற்கு எந்தப் பலனுமில்லை, பயனும் இல்லை. இதனால் தளராத முயற்சி ஒருவனுக்கு தன்னம்பிக்கையும், ஆற்றலையும் கொடுக்கும் எனலாம்.

## முகஸ்துதிக்கு மகிழக்கூடாது

நிர்வாகத்திற்குப் புகழ்ச்சி உரை தேவையற்றது. ஒருவர் தாம் செய்யும் வேலையில் இருந்து தப்பி நழுவுவதற்கு இதனைப் பயன்படுத்தவர். தம் அவரே ஆயினும் ஒருவர் தம்மைப் புகழ்ந்து பேசும்போது, புகழ்ச்சிக்கு மதி மயங்கக் கூடாது. ஒருவர் அவ்வாறு பேசும்பொழுது அப்பேச்சினைத் தவிர்த்துவிட வேண்டும். நம்முடையதே ஆனாலும் பொருத்தமற்ற ஆபரணங்களை எவரும் அணிவதில்லை அல்லவோ? அதுபோல தேவையற்ற புகழ்ச்சியான சொல்லினைக்கூறப் பிறருக்கு இடந்தரக்கூடாது. இதனை,

“தமரேயும் தம்மைப் புகழ்ந்துரைக்கும் போழ்தில்

அமராததனை அகற்றலேவேண்டும்

அமையாரும் வெற்ப! அணியாரே தம்மைத்

தமவேனும் கொள்ளாக் கலம்”

என்ற அடிகள் செப்புகின்றன (Rasamanickam Pillai, 1958). இதனை நோக்க ஒருவர் அறிவுக்கண் கொண்டு செயலாற்ற வேண்டும் என்பதை அறியமுடிகின்றது. “மனிதன் தனது மனநிலையை மாற்றிக் கொள்வதன் மூலம் தனது வாழ்க்கையை மாற்றிக் கொள்ளலாம் என்பதே எனது தலைமுறையின் மிகப்பெரிய கண்டுபிடிப்பாகும்” என்பார் சிந்தனையாளர் வில்லியம் ஜேம்ஸ் என்ற அறிஞர். ஆகவே இதனை உணர்ந்து வேலையில் பணியாற்ற வேண்டும் (Rasaram, 2007).

## பிறரை அலட்சியம் செய்யக்கூடாது

ஒருவர் மற்றொருவரைத் தனக்குத் துணையாகக் கொள்ளுதல் ஏற்புடையது. நிர்வாகத்திற்குக் காரியம் முக்கியமே அன்றி வீரியம் முக்கியம் அன்று என்று செயலாற்ற வேண்டும். ஒரு செயல் நடைபெறுவதற்கான கண்ணோட்டம் மட்டுமே ஒருவரிடம் இருக்க வேண்டும். பிற சிந்தனைகள் இருக்கக் கூடாது “இல்லையே ஒன்றுக்குதவாத ஒன்று” (இராசமாணிக்கம் பிள்ளை, 1958) என்ற அடி இதனைப் பகர்கின்றது. ‘சிறு துரும்பும் பல்குத்த உதவும். ஆகையால் மற்றவர்களின் ஆதரவைப் பெறுவது நிர்வாகத்திற்கான முன்னேற்றமே ஆகும். எவரையும் ஏளனமும், அலட்சியமும் செய்யக்கூடாது.

“பண்டு முளைப்பது அரிசியே ஆனாலும்

விண்டு உமிபோனால் முளையாதாம்- கொண்டபேர்

ஆற்றல் உடையார்க்கும் ஆகாது அளவின்றி

ஏற்ற கருமம் செயல்”

உமியை நீக்கி அரிசியைப் பயிரிட்டால் எதுவும் முளைக்காது அதுபோல எவ்வளவு ஆற்றல் உடையவராயினும் தகுந்த துணை இல்லையென்றால் தாம் நினைத்த காரியத்தைச் செய்ய முடியாது என்பதை அறிந்து செயலாற்ற வேண்டுமென்பதை இங்கு கற்க முடிகின்றது (Marimuthu, 2009).

## உடையால் மதிப்புப்பெறல்

ஒருவர் படுத்து உறங்குவதற்கு ஓர் இடம் இல்லாத வறியவராக இருந்தாலும், நன்றாக ஆடை உடுத்திக் கொண்டு வந்தால் அவர்களைப் பார்த்து பசிக்கு உணவு உண்கிறீர்களா என்று கேட்போர் இவ்வுலகில் இல்லை. ஆகையால் வீட்டினிடத்தே அழிவு மிகுதியாக இருந்தாலும் ஒருவர் புறத்தோற்றத்தால் பொலிவு பெற்று விளங்க வேண்டும் என்னும் உயரிய சிந்தனையை,

"அகத்தால் அழிவு பெரிதாயக் கண்ணும்

புறத்தாற் பொலிவுறல் வேண்டும்-எனைத்தும்

படுக்கை இலராயக் கண்ணும் உடுத்தாரை

உண்டி வினவுவார் இல்"

எனக் குறிப்பிடுகின்றது (Rasamanickam Pillai, 1958). "ஆள் பாதி ஆடை பாதி" என்பது பழமொழி. உடை அணிதல் மனிதருக்கே உரிய தனிச்சிறப்பு அவ்வகையில் நிர்வாகத்திற்கான ஆளுமைத்திறமை வலுப்படுத்த இப்பண்பு உதவும். அலுவலகத்தில் தலைமைப் பொறுப்பில் உள்ளவர்களுக்கு அவர்களது உடையின் செயல்பாட்டால் பிறரிடம் நல்ல மதிப்பைப் பெறுவார்கள். மேலும் குடும்பத்திலும், நிர்வாகச் செயல்பாட்டிலும் உடை ஒருவருக்கு உயர்வான மதிப்பையும், மரியாதையையும் தரவல்லது என்பதை இங்குப் பார்க்க முடிகின்றது.

## தோற்றப்பொலிவு

ஒருவரின் தோற்றத்தை வைத்து அவர்களின் செயலை மதிப்பார்கள். கம்பீரமுடைய தோற்றத்தில் இருப்பவர்களைக் கண்டால் அச்சஉணர்வு தோன்றும். வசீகரத்தோற்றம் பிறரை மயக்கும். பணிவான தோற்றம் பிறருக்கு கட்டுப்பட்டு வாழும். அமைதியான தோற்றம் அடக்கத்தை உணர்த்தும். இதனை ஆளுமை என்பார்கள். ஆங்கிலத்தில் இச்சொல் 'Personality' என அழைக்கப்படுகின்றது. அணிகலன்களும், ஆபரணங்களும், ஆடையும், முகப்பொலிவும் ஒருவரின் ஆளுமை வெளிப்பாடு என்று சொல்லிவிட முடியாது. அவர்களின் செயல்பாடுகளும் ஆளுமைத்திறனை வெளிப்படுத்துகின்றது. ஒருவனை சிறப்புடைய மனிதனாகச் செய்யும் தன்மை ஆளுமைக்குள்ளது என்று சொல்லலாம். ஒன்றை முடிவெடுக்கும் திறன், தகவல் பரிமாற்றத்திறன், நேரத்தைக் கையாளுதல், பிறரின் மன ஓட்டத்தை அறிதல் எனப் பலவற்றையும் இப்பண்பு வெளிப்படுத்துகின்றது. திருமாலைக் கொல்லும்பொருட்டு அரக்கர்களான மது, கைடவர் என்போர், திருமாலைச் சுற்றி வளைத்தபோது மோகினிப் பெண் வடிவம் எடுத்து அவர்கள் வந்த காரியத்தை மறக்குமாறு செய்தவன் திருமால். ஆகையால் உருவப்பொலிவு ஒருவனுக்கு வெற்றியைத் தேடித்தருகின்றன. இதனை,

"வாட்டிற லானை வளைந்தார்கள் அஞ்ஞான்று

வீட்டிய சென்றார் விளங்கொளி -காட்டப்

பொருவறு தன்மைகண்டு அஃதொழிந்தார்அஃதால்

உருவு திருவூட்டு மாறு"

இவ்வரிகள் உருவத்தோற்றம் ஒருவருக்கு நலம் உடையதாகவும், சிறப்புடையதாகவும் நிர்வாகத்தில் அமைகின்றன என்பதை வலியுறுத்துகின்றது (Rasamanickam Pillai, 1958).

## முடிவுரை

இன்றைய நிர்வாகத்திற்கு வழிகாட்டியாய்ப் பல்வேறு சிந்தனைகளைப் புகட்டுவதில் பழமொழிநானூறு தனித்த இடத்தைப் பெற்றுள்ளது. குடும்பமாயினும், சமூகமாயினும் ஒருவன் மதிப்புடையவனாக மதிக்கப்பட வேண்டுமெனில் அவனிடம் நிர்வாகப்பண்பு கட்டாயம்

இருக்கவேண்டும். ஒரு பணியைத் திட்டமிட்டும், பொறுப்புடனும், செயல்படுத்தி வந்தால் தோல்வியையும் வெற்றியாக உருவாக்குகின்ற தன்மை நிர்வாகத்திற்கு உண்டு என்பதை இக்கட்டுரை உணர்த்தி நிற்கின்றது.

## References

Annamalai, S. (1997) Thirumanthiram, Indiap panpattu aarachi Niruvanam, Chennai, India.

Chandrakumari, S. (2021). Proverbs Four Hundred emphasizing ethics, International Research Journal of Tamil, 3 (4), 58- 62. https://doi.org/10.34256/irjt22s616

Kathiresasn, (2010) Vaniga Amaippu Murai, Prasanna Press, Chennai, India.

Kavidasan, (2012) Thanambikaiyea Vetri, Kumaran Pathippagam, Chennai, India.

Marimuthu, A. (2009) Needhi Nool Thoguthi, Thirumagal Nilaiyam, Chennai, India.

Palaniammal, A. (2022) The Value at Educated and the Contempt of Uneducated in Pazhamozhi Nanooru, International Research Journal of Tamil, 4(S-6), 118-124. https://doi.org/10.34256/irjt2148

Rasamanickam Pillai, M. (1948) Palamozhi Nanooru, South India Saiva Sidhandha Noorpathippu Kazhagam, Chennai, India.

Rasaram, (2007) Muthumozhi Kanji, Mulai Nilaiyam, Chennai, India.

Sri Chandran, (2016) Naladiyar, Varthamaan Pathippagam, Chennai, India.

Tamilaruvi Maniyan, (2004) Anpir Sirantha Thavamilai, Karpagam Puthagalayam, Chennai, India.

Varatharasan, M. (1959) Thirukkural Thelivurai, Varthamaan Pathippagam, Chennai, India.

**Acknowledgement:** Author would like to thank the Management of Nallamuthu Gounder Mahalingam College, Pollachi for financial assistance through SEED money support.

**Funding:** No funding was received for conducting this study.

**Conflict of Interest:** The Author has no conflicts of interest to declare that they are relevant to the content of this article.

**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author 2023. The text of this article is open access and licensed under a Creative Commons Attribution 4.0 International License